# குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.18 ஆயிரம் கோடியில் புதிய திட்டங்கள்!

## சட்டப்பேரவையில் மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒரு 100 லிட்டர் என்று சொன்னால் 5 லிட்டர், 10 லிட்டர்தான் செலவாகும்; மீதமுள்ள 90 லிட்டர் தரைக்குக் கழிவாகத்தான் போகும். எனவே, அவ்வளவு கழிவையும் கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்து நெசப்பாக்கத்தில் கொண்டு செல்கிறோம் என்று சொன்னால், 1,000 MLDக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கினால்கூட, இதையும் எடுத்துச் சென்று சுத்திகரித்து நிலத்தடி நீரை பெருக்கினால்தான் அந்தத் தண்ணீர் சரியாக வரும். எனவே, அந்த 540 இடங்களிலிருந்து கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால் குழாய்கள் பதிக்க வேண்டும், சாலைகளைத் தோண்ட வேண்டும், போக்குவரத்து நெரிசல்கள் என எல்லா சிரமங்களும் இருக்கின்றன. எனவே, அதில் மிகப்பெரிய சவால்கள் இருக்கிற காரணத்தினால்தான், தொடர்ந்து அந்தப் பணிகளை மேற்கொண்டிருந்தாலும், கடைசியாக இறுதியாக செய்ய முடியவில்லை. எனவே, ஆங்காங்கு தேங்கியிருக்கிற ஆறுகளையெல்லாம் ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம், வீராங்கல் ஓடை போன்ற நீர்வளத் துறையிலிருந்த ஆறுகளை மீட்டெடுத்து, நம் அரசாங்கம், மாநகராட்சி எடுத்து அந்த ஆறுகளை தூர்வாருகிற நிலையையும் நாங்கள் எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சித் துறையின் பணிகளை நான் சொல்ல விரும்புகிறேன். இதிலும் எங்களுக்கு உற்ற துணையாகத் தலைவர் கலைஞர், ஐயா தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தளபதி, தம்பி ஐயா இளவல் உதயா அவர்கள், இவர்களோடு எங்களுடைய தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் நான் நினைவுக் கூர விரும்புகிறேன். இங்கிருக்கிற திருமதி பிரேமலதா விஜயகாந்த், தேமுதிகவின் தலைவர், நம்முடைய பேராசிரியர் முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா அவர்கள், SDPIயின் முபாரக், தமிமுன் அன்சாரி போன்ற தலைவர்கள் எங்களோடு உறுதுணையாக இருந்து தேர்தலில் பணியாற்றியவர்கள்; அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ரூ.1.25 லட்சம் கோடியில் நகராட்சித் துறையில் பணிகள்!

நான் பொதுவாக, நகராட்சித் துறையில் என்னென்ன பணிகள் செய்தோம் என்று சொன்னால் எல்லாம் தெரிந்ததுதான். எங்களிடம் இருந்த அதிகாரிகள்தான் முழுமையாக இன்றைக்கும் நகராட்சித் துறையில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குடிநீர் வசதிகள், மழைநீர் வடிகால் வசதிகள், கழிவு நீர் அகற்றுதல், கழிவறை வசதிகள், தார் சிமென்ட் சாலைகள் அமைத்தல், புதிய பேருந்து நிலையங்கள், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், பொது சுகாதாரம், சந்தைகள் அமைத்தல், அறிவுசார் மையங்கள், நூலகங்கள் அமைத்தல், பள்ளிகள் பராமரித்தல், நீர் நிலைகளைத் தூர்வாரி கரைகளை பலப்படுத்துதல், biominingமூலம் தேக்க திடக்கழிவுகளை அகற்றுதல், திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, குப்பையிலிருந்து எரிவாயு தயாரித்தல், தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றி அவர்களுக்கு அனைத்துப் பாதுகாப்பும் வழங்குதல், புதிய நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் போன்ற இந்தப் பணிகளைத்தான், கடந்த ஐந்தாண்டுகளில் 1 இலட்சம் கோடி செலவில் செய்திருக்கிறோம். எங்களுடைய ஐந்தாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதைச் சொல்கிறோம்.

10 மாநகராட்சிகள் புதிதாக உருவாக்கப்பட்டன, ஏற்கெனவே இருந்த 31 நகராட்சிகள் தரம் உயர்த்தப்பட்டன. 7 பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும், 22 ஊராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகள் சேர்ந்து 6 நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

### புதிதாக 107 பேருந்து நிலையப் பணிகள்!

29 ஊராட்சிகள், 25 பேரூராட்சிகள் தரமுயர்த்தப்பட்டன. ஆக, சென்னையையும் சேர்த்து 25 மாநகராட்சிகள், 137 நகராட்சிகள், 487 பேரூராட்சிகள் இருந்தன. 19,054 கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 380 குடிநீர்ப் பணிகள் முடிக்கப்பட்டு, மேலும், 1,220 பணிகள் நடைபெற்று வந்தன. 2,713 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டன. இதில், பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டும் 1,431 கி.மீ. ஆகும். 870 கி.மீ. நீளத்திற்கு ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டன. 42 பாதாள சாக்கடைப் பணிகள் முடிக்கப்பட்டு, 51 பணிகள் நடைபெற்று வந்தன. திடக்கழிவிலிருந்து 1,020 உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 5 மாநகராட்சிகளில், குப்பைகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 7 இலட்சத்து 10 ஆயிரம் தெரு விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றப்பட்டன. புதிதாக 69,500 எல்.இ.டி. விளக்குகளும், 45,700 பழைய தெரு விளக்குகள் புதிய எல்.இ.டி. விளக்குகளாக மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 107 பேருந்து நிலையங்கள் புதிதாக அபிவிருத்திப் பணிகள்மூலம் அமைக்கப்பட்டன. 110 பேருந்து நிலையப் பணிகள் நடைபெற்று வந்தன. புதிதாக 153 சந்தைகள் கட்டி முடிக்கப்பட்டன. 77 சந்தைப் பணிகள் நடைபெற்று வந்தன.

92 அறிவுசார் மையங்களும், 44 நூலகங்களும் கட்டி முடிக்கப்பட்டன. 1,145 நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டன. 920 பூங்காக்கள் புதிதாகவும், மேம்பாடும் செய்யப்பட்டன. 230 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்பட்டன. Biomining மூலம் திடக்கழிவுகளை அகற்றி, 1,290 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டன. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் அமைக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியில் சிங்காரச் சென்னை திட்டத்தின்கீழ் 1,048 பணிகள் முடிக்கப்பட்டன. இணையவழிமூலம் சுய அறிவிப்பு கட்டட திட்ட அனுமதி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

Victoria Public Hall புத்துயிரூட்டப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புதிதாக மன்ற கூட்ட அரங்கு கட்டடம் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பெருநகரப் பகுதிகளில் அதிகரித்துவரும் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில், திறமையான போக்குவரத்து அமைப்பாக ITMS உருவாக்கப்பட்டது. விருகம்பாக்கம், ஓட்டேரி நல்லா மற்றும் வீராங்கால் ஓடை கால்வாய்களை, நீர்வளத் துறையிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெறப்பட்டு, கரைகளின் தடுப்புச் சுவரை உயர்த்தவும், குப்பைகள் தேங்காமல் இருக்க பாதுகாப்பு வேலிகள் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்!

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. அனைத்துப் பாலங்களிலும் அழகுபடுத்தும் பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

தனியார் பள்ளிகளுடன் போட்டியிடும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சில பள்ளிகள் ஸ்மார்ட் வகுப்பறைகளுடன் மேம்படுத்தப்பட்டன. இதனால், பெரும்பாலான மாணவர்கள் பலன்பெற்று வந்தனர். போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு முதல்வர் படிப்பகங்கள் அமைக்கப்பட்டன. நீலக்கொடி கடற்கரை திட்டத்தின்மூலம் மெரினா கடற்கரை தரமுயர்த்தப்பட்டது. அம்மா உணவகங்கள் அனைத்தும் முழுமையாகப் பராமரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தன. தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மெரினா கடற்கரை நீச்சல் குளம் பாதுகாக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கான கடற்கரை அணுகு பாதை அமைக்கப்பட்டது. சென்னைப் பெருநகரை அழகுபடுத்தி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதுகாப்பாக நடைபாதைகளைப் பயன்படுத்த வாகனம்சாரா போக்குவரத்துத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. விலங்குகள் இனப்பெருக்கக் கட்டுப்பாடு மையங்கள், நகர்ப்புற சென்னையில் புதிதாக 3 இடங்களில் அமைக்கப்பட்டன. சென்னையில் புதிதாக 13 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 12 பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில். . .

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் தனியார் பங்களிப்புடன் புதிதாக கழிப்பறைகள் கட்டப்பட்டன. மேலும், புதிதாக மண்டல அலுவலகங்கள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், அலுவலகக் கட்டடங்கள் போன்ற எண்ணற்ற பணிகள் செயல்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சிக்கென்று தனித்தனியாக இருந்த சுமார் 25 சட்டங்கள், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, 1998ல் புதிதாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் இயற்றப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்காக உயர்நோக்குடன் கொண்டு வரப்பட்ட அச்சட்டம், புதிய திட்டங்களுடன், புதிதாக உருவாக்கப்பட்ட விதிகளுடன், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2023, 13.4.2023 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

## புதிதாக 10 மாநகராட்சிகள் உருவாக்கம்! 31 நகராட்சிகள் தரம் உயர்த்தப்பட்டன!

81 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 52 retrofitting திட்டங்கள் முடிக்கப்பட்டன. மேலும், 15 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடைபெற்றும் வந்தன. இதனால், கூடுதலாக 2.39 இலட்சம் மக்களுக்கு, 1,175 எம்.எல்.டி. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டன. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்2 தொடங்குவதற்காக அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு வந்தன.

### சென்னை குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!

சென்னை குடிநீர் வடிகால் வாரியம். இப்படிதொடர்ந்து வடிகால்வாரியம்மூலமாகவும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மூலமாகவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுகூட உள்ளாட்சி முடிய இருக்கிறது. இன்னும் 4, 5 மாதங்களில் ஜனவரி வந்தால் நகராட்சியினுடைய பதவிக் காலம் முடிய இருக்கிறது. புதிய தேர்தல் அறிவிப்புகள் வர இருக்கின்றன. நாங்கள் இருக்கும்போதே உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் காரணமாகத்தான் communal rotationஐ சரி செய்து, மீண்டும் இருக்கிற வார்டுகளை அதிகப்படுத்தி, மக்கள்தொகையை ஒரே சீராக வைத்து தேர்தலை நடத்த வேண்டும் என்று எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் பணிகளை முடித்திருந்தாலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட்டது. இப்போது சென்னையிலே 200 வார்டுகள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு வார்டிலே 15 ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன. ஒரு வார்டிலே 40 ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன.

அதேபோன்று, 50 சதவிகித இட ஒதுக்கீடு என்று வருகிறபோது, 10 வார்டுகள் ஒரு இடத்தில் இருக்குமானால், 9 வார்டுகள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டு, ஒரே ஒரு வார்டுதான் ஆண்களுக்காக ஒதுக்கப்படும் சூழல் வருகிறது. இதையெல்லாம் சீரமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் சென்னையை 300 வட்டங்களாகவும், மதுரை, திருச்சி, கோவை போன்ற வார்டுகளை அதிகப்படுத்தி, அதற்கான அடிப்படை வசதிகளையும் செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நாங்கள் முந்தைய அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்தபோது, ஒன்றிய அரசிலிருந்து மொத்தமாக ஆயிரம் கோடி ரூபாய் நிதி அதற்காகத் தந்தார்கள். எப்படியென்றால், கிராமங்களை நகரத்தோடு இணைத்து, நகரத்தில் இருக்கிற அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக ஆயிரம் கோடி ரூபாய் தரப்பட்டது. 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இருக்கின்றன. 380 ஒன்றியங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 38 மாவட்ட ஊராட்சிகள் இருக்கின்றன.

ஊராட்சிகளைப் பொறுத்தவரை 1,500 வாக்குகள் இருந்த ஊராட்சிகள் எல்லாம் இன்றைக்கு 5 ஆயிரம் வாக்குகள், 6 ஆயிரம் வாக்குகள் என்று வந்துவிட்டது. சில இடங்களில் 40 ஆயிரம் வாக்குகள் கொண்ட ஊராட்சிகள் எல்லாம் இருக்கின்றன. இதையெல்லாம் பகிர்ந்து, பிரித்து, இரண்டு தேர்தல்களுக்கும் ஏதுவாக, ஒவ்வொரு இடத்திலும் ஊராட்சிகளையும் பிரிக்க வேண்டும்; ஒன்றியத்தையும் அதிகப்படுத்த வேண்டும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணிகளைச் செய்து முடித்தால் ஊராட்சிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 20 ஆயிரமாகவும், ஒன்றியங்களின் எண்ணிக்கை 500 முதல் 600 வரையிலும் உயரும்.

### பணிகளை சீரமைக்க குழு!

இது, அனைத்து பொதுமக்களும் நகராட்சித் தலைவர்களாக, ஒன்றியத் தலைவர்களாக, ஊராட்சித் தலைவர்களாக பொறுப்பேற்று மக்கள் பயன்பாட்டிற்கு ஏதுவாக பணியாற்ற வழிவகுக்கும். எனவே, இந்தப் பணிகளைச் சீரமைப்பதற்காக அன்றைய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலாளர் மதிப்பிற்குரிய ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. அவரது தலைமையின்கீழ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளராகப் பணியாற்றிய தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இருப்பினும், சில காரணங்களால் இப்பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மீண்டும் அந்தக் கமிட்டிக்கு நீங்கள் புத்துயிர் தந்து, உள்ளாட்சிகளிலே அனைத்து பிரதிநிதிகளும் கலந்து கொண்டு, தேர்ந்தெடுக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டத்தை உருவாக்கி, அதனை அனைத்து இடங்களிலும் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறை என்பது மக்களுக்காக நிச்சயமாக, எங்கள் ஐந்தாண்டு காலத்தில் மிக மன நிறைவோடு பணியாற்றியிருக்கிறோம். தளபதி அவர்கள் பார்த்த துறை. அதை எங்களிடம் தந்தபோது, அவர் சொன்னபடியே, நாங்கள் செய்திருக்கிறோம் என்ற மனநிறைவோடு இருக்கிறது. இவ்வளவு பணிகள் நடந்திருக்கிறது.

### கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்!

2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 41 சதவிகிதம்தான் நகரத்தில் இருக்கின்ற பொதுமக்கள். இப்போது மக்கள்தொகை கணக்கீட்டின்படி 60 சதவிகிதத்திற்கு நகரத்திற்கு வந்துவிட்டது. இந்தியாவிலேயே நூற்றுக்கும் மேற்பட்ட பெரிய நகரங்கள் இருப்பது நம்முடைய தமிழ்நாட்டில்தான். நகரங்கள் இருக்கிறபோது 60 சதவிகிதம் மக்களுக்குத் தேவையான திட்டங்களை உண்டாக்க வேண்டும். Floating populationதினந்தோறும் 10 சதவிகிதம் மக்கள் நகரத்திற்கு வந்து செல்கிறார்கள். மொத்தம் 70 சதவிகிதம் மக்கள் நகரத்தில் வருகிறார்கள். அவர்களுக்கு குடிக்க தண்ணீர் தர வேண்டும்; நடக்க சாலை தர வேண்டும்; போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும்; அவர்களுக்கு பொழுதுபோக்காக அமர்வதற்கு இடம் தர வேண்டும்; இவ்வளவும் செய்கின்ற ஒரு துறையாக இந்தத் துறை இருக்க வேண்டும். அதற்கான நிதியை இன்னும் அதிகமாக, இப்போது 29 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இன்னும் அதிகமாக தேவைப்படுகிற ஒரு துறையாக இந்தத் துறை இருக்கிறது. எனவே, இந்தத் துறையில் தொடர்ந்து மக்கள் பயன்பட வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு 60 சதவிகிதம் மக்கள் நகரத்தில்தான் இருக்கிறார்கள். ஒரு ஆட்சிக்கு அல்லது வெளியூர்களிலிருந்து வருகிறார்கள் என்று சொன்னால், முதலிலே தென்படுவது நகரங்கள்தான். அந்த நகரத்தில் இருக்கிற வசதிதான். அதை வைத்துத்தான் நாட்டையே அவர்கள் பார்ப்பார்கள். எனவேதான், அப்படிப்பட்ட நல்ல நகராட்சித் தலைவராக, நம்முடைய மேயர் தளபதி தலைவர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர், துணை முதலமைச்சர், முதலமைச்சராக இருந்து வழிநடத்திய துறையிலே நாங்கள் பணியாற்ற எங்களை அனுமதித்தது எனக்கு பெரிய நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அவரை இந்த நேரத்திலே நினைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

---

பருவமழைக் காலத்தில் மனித உயிர்களைக் காக்க

# அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## பேரவையில் — முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

*சென்னை, ஆக. 27-*

சென்னை, பாடி, புதுநகர் 10வது தெருவை சேர்ந்த கலாவதி 59 இவர் அண்ணா நகரில் உள்ள சர்ச்சுக்கு சென்று விட்டு இரவு இரண்டாவது அவென்யூ வழியாக டவர் மெட்ரோ ரயில் நிலையம் நோக்கி நடந்து சென்ற போது அங்கு மாநகராட்சியால் தோண்டப்பட்டு இருந்த மழைநீர் வடிகால் பள்ளத்தில் தேங்கியிருந்த மழை நீரில் தவறி விழுந்து துடித்துள்ளார். அங்கிருந்தோர் அவர் மின்சாரம் பாய்ந்து தான் துடித்து கொண்டிருக்கின்றார் என அருகில் சென்று பார்க்க பயந்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்த நிலையில்



அவர்கள் வந்து அவரை மீட்டு பரிசோதித்த போது அவர் ஏற்கனவே உயிரிழந்தது தெரிய வந்தது.

உயிரிழந்த பெண்மணிக்கு நேர்ந்த நிலை போன்று யாருக்கும் இனி வரக்கூடாது என்பதற்காக இது குறித்து சட்டமன்றத்தில் பி.கே.சேகர்பாபு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது:-

பேரவை தலைவர் அவர்களே!

சமீபத்தில் கால்வாயில் விழுந்து கலாவதி என்ற ஒருவர் உயரிழந்ததாக வெளியான செய்திகள் குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

உயிரிழந்தது மழை நீர் கால்வாயிலா அல்லது மின் கசிவு காரணமா என்பதில் சந்தேகங்கள் நிலவுகின்றன.

மாநகராட்சி தரப்பில் அது குறித்து மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தாலும் மழைக்காலம் தொடங்க உள்ள சூழலில் இதுபோன்ற பள்ளங்களால் பொதுமக்களின் உயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மேலும் சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மெட்ரோ பணிகள் மற்றும் கால்வாய் தோன்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதை சுட்டிக் காட்டிய அவர் அத்தகைய இடங்கள் அனைத்திலும் தடுப்புகள் அமைப்பது உள்ளிட்ட தகுந்த பாதுகாப்பு சூழலை உருவாக்க வேண்டும்.

விலைமதிப்பற்ற மனித உயிர்களை காக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பி.கே.சேகர் பாபு பேசினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பி.ஜி.அவினாஷ் அவர்களின் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வாழ்த்தினார். இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு 1வது மாமன்ற உறுப்பினரும் வட்ட செயலாளருமான மு.சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.